# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 145/ந/2017

ஆணை எண். 239/2017

நாள் : 22/09/2017

திரு ஏ. வெங்கடேஷ்,
தென்காசி. – முறையீட்டு மனுதாரர்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்,
திருநெல்வேலி மாவட்டம்.
– எதிர் மனுதாரர் கள்

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, கீழப்பாளையம் தெரு, 214/129 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு A. வெங்கடேஷ் அவர்களின் 06.07.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 145/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, 214/129, கீழப்பாளையம் தெருவைச் சேர்ந்த திரு A. வெங்கடேஷ் என்பவர் கீழ்க்காணும் விவரங்களை வழங்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(1) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் இன சுழற்சி முறையை பின்பற்றாமலும், மாற்றுத் திறனாளிகளெனப் போலி ஆவணம் கொடுத்துப் பணியில் சேர்ந்தவர்களைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் ;

(2) மேற்குறிப்பிட்ட மாவட்டத்தில் 01.01.2005 முதல் 07.06.2017 வரை உள்ள காலகட்டத்தில் பணியில் சேர்ந்தவர்களின் பட்டியலை மீண்டும் ஆய்வு செய்து, அதில் இனசுழற்சி முறை மற்றும் மாற்றுத்திறனாளிகள் சலுகையில் பணியில் சேர்ந்தவர்களின் பணி நியமனத்தை ஆய்வு செய்தல் .

முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை ஏற்கனவே மாவட்ட ஆட்சியரால் பரிசீலிக்கப்பட்டு, போலியான வேலை வாய்ப்புப் பதிவு மற்றும் மாற்றுத்திறனாளி சான்று சமர்ப்பித்து நகராட்சி மற்றும் இதர உள்ளாட்சி அமைப்புகளின் பணி நியமனங்களில் முறைகேடுகள் நடைபெற்றதாக வரப்பெற்ற

புகாரில் முதல் தோற்றத்திலேயே (Prima Facie) முறைகேடுகளுக்கான ஆதாரங்கள் உள்ளதாகக் கருதியதால் குற்றப்புலனாய்வுத் துறை விசாரணைக்கு உத்தரவிடக்கோரி 29.07.2015 நாளிட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் கடித எண்.30176/14/2015–ல் அரசின் உள்துறை முதன்மைச் செயலர் கோரப்பட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் மேற்குறிப்பிட்ட மாவட்ட ஆட்சியரின் கடித நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மனுதாரரின் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக திருநெல்வேலி மாவட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணி நியமனம் செய்யப்பட்ட நபர்களின் பதிவுகளை ஆய்வு செய்து உரிய விவரங்களை சமர்ப்பிக்கும்படி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 22–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
திருநெல்வேலி (இணைப்புடன்).

2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மாவட்டம்,
திருநெல்வேலி (இணைப்புடன்0

3. திரு ஏ. வெங்கடேஷ்,
214/129– கீழப்பாளையம் தெரு,
தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்